## சிறப்பு வரைபடம் 4.1
## இலங்கையில் அண்மைய பொருளாதார அதிர்வுகள்: நிச்சயமற்றத்தன்மையே புதிய வாழ்க்கை முறையாகும்

அண்மைய ஆண்டுகளில், இலங்கை பொருளாதாரமானது அதிகளவிலும் தீவிரமானதுமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளை எதிர்கொண்டுள்ளது. இவ்வதிர்வுகளில் சில இயற்கை அனர்த்தங்களால் தோற்றம்பெற்ற அதேவேளை, ஏனையவை உள்நாட்டு மற்றும் உலகளாவிய மனிதனால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளால் தூண்டப்பட்டவையாகும். தொடர்ச்சியானதும் தீவிரமானதுமான பொருளாதார அதிர்வுகளால் ஏற்படும் அதிகரித்தளவிலான நிச்சயமற்றத்தன்மைகள், வீட்டுத்துறையின் நுகர்வு மற்றும் சேமிப்பு தீர்மானங்களையும், வியாபாரங்களின் உற்பத்தி மற்றும் முதலீட்டு தீர்மானங்களையும் பாதித்து, நாட்டின் வளர்ச்சி வாய்ப்புக்களைத் தடுக்கின்றன. மேலும், பொருளாதார நெருக்கடிகளின் போது கொள்கை பரிமாற்ற வழிகள் வலுவற்றதாகவும் கொள்கை பதிலிறுப்புக்கள் குறைந்தளவில் ஊகிக்கத்தக்கவையாக காணப்படுவதாலும், இத்தகைய அதிகரித்தளவிலான நிச்சயமற்றத்தன்மைகள் காரணமாக பேரண்ட மட்டத் தீர்மானம் மேற்கொள்ளலும் கொள்கை வகுத்தலும் மேலும் சவாலாக மாறியிருக்கின்றன.

இவ்வதிர்வுகளின் சமூக-பொருளாதார தாக்கங்கள் பன்முகமானதும் பொருளாதாரத்தில் நீடித்த பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவையுமாகும். பொதுவாக, அத்தகைய அதிர்வுகள் குடித்தொகையின் பாதிப்படையக்கூடிய பகுதியினருக்கு சமமற்றவிதமான சுமையை ஏற்படுத்தி, இதன் மூலம் பொருளாதார சமமற்ற தன்மைகளை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

நிச்சயமற்றத்தன்மை 'புதிய வாழ்க்கை முறையாக' மாறியுள்ளதால், துரிதமாக பரிணமித்துவரும் தொழில்நுட்பம், அதிகரித்த உலகளாவிய மோதல்கள், புவிசார் அரசியல் பிளவுகள், காலநிலை மாற்றத்தினால் தூண்டப்படும் இயற்கை அனர்த்தங்கள், புதுப்பிக்கத்தக்க வலுவிற்கான நிலைமாற்றம், அதிகரித்த பாதுகாப்புவாதம் மற்றும் ஏனைய பல்வேறு அதிர்வுகள் என்பவற்றின் காரணமாக எதிர்காலம் மேலும் சவால்களுக்கு உட்பட்டதாகவிருக்கின்றது.

அண்மைய தொற்றுநோய் மற்றும் உள்நாட்டு பொருளாதார நெருக்கடி என்பவற்றின் போதான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, குறிப்பாக பொருளாதாரமானது போதுமானளவு வெளிவாரி மற்றும் இறை தாங்கியிருப்புக்களை கொண்டிருக்காதபோதும் நாணயக் கொள்கை இடைவெளி வரையறுக்கப்பட்டுள்ளபோதும் இவ்வதிர்வுகள் பொருளாதார வளர்ச்சியின் பின்னடைவு மற்றும் உயர்வானதும் தளம்பல்மிக்கதுமான பணவீக்க நிகழ்வுகள் என்பன உள்ளடங்கலாக, குறிப்பிடத்தக்களவிலான பேரண்டப் பொருளாதார உறுதியற்றத்தன்மையை உருவாக்கக்கூடியதாகவிருக்கும். எனவே, கொந்தளிப்புக் காலங்கள் முழுவதும் பொருளாதாரத்தை வழிநடாத்துவதற்கு, போதுமான மற்றும் செயல்திறன்மிக்க இறை மற்றும் வெளிவாரி தாங்கியிருப்பு என்பவற்றை கட்டியெழுப்புதல் மிகவும் அவசியமானதாகும். இத்தகைய அவசியமாக தாங்கியிருப்புக்களைப் பேணுவதன் முக்கியத்துவம் டித்வா புயல் காலப்பகுதியிலும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நெருக்கடி தயார் நிலையை வலுப்படுத்துதலும், காப்பீடு போன்ற இடர்நேர்வினை பகிர்ந்துக்கொள்ளும் பொறிமுறைகளை ஊக்குவித்தலும் காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளின் தாக்கங்களை தணிப்பதற்கு பொருளாதார முகவர்களுக்கு உதவியாகவிருக்கக்கூடும். நன்கு இலக்கிடப்பட்ட, இருப்பினும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த சமூக பாதுகாப்பு வலைகள், பாதிப்படையக்கூடிய குழுக்கள் மீது பொருளாதார அதிர்வுகளின் எதிர்மறையான தாக்கங்களைத் தணிப்பதற்கு இன்றியமையாததாகின்றன.

### அண்மைக் காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் எதிர்கொண்ட பிரதான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குழப்பங்கள் (அதிர்வுகள்)




**வெளிநாட்டு அதிர்வுகள்**

- 2011-12- உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு - ஐரோப்பிய பிராந்தியத்தில் தீவிரமடைந்த அரச கடன் நெருக்கடி, மற்றும் எண்ணெய் உற்பத்தி செய்யும் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட புவிசார் அரசியல் உறுதியின்மை.
- 2020-21- கொவிட் - 19 உலகளாவிய பெருந்தொற்று நோயும், நீண்டகால ஊரடங்குகளும் அதில் பயணிகள் போக்குவரத்திற்கான விமான நிலையங்களும் கடல் துறைமுகங்களும் மூடப்பட்டதும் பல முக்கிய பொருளாதாரத் துறைகளை பாதித்தது.
- 2025 - ஐக்கிய அமெரிக்க தீர்வைகளின் திருத்தங்களால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மைகள்
- 2026 கா1- ஐக்கிய அமெரிக்க - இஸ்ரேல் - ஈரான் போர் மற்றும் உலக அரசியல் பதற்றம் என்பன உலக வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலியில் பாரிய நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

**உள்நாட்டு அதிர்வுகள்**

- 2016- பாரிய வெள்ளம் மற்றும் நிலச்சரிவு
- 2017- 2016 இலிருந்து நீடித்த வரண்ட காலநிலை நிலைமைகள்
- 2018- அரசியல் உறுதியின்மை
- 2019- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் - சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டது.
- 2022-23- பொருளாதார நெருக்கடி பொதுமக்கள் பதற்றத்தையும் அரசியல் குழப்பத்தையும் ஏற்படுத்தியது.
- 2025- டித்வா புயலினால் ஏற்பட்ட வானிலை சார்ந்த இடையூறுகள்.

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.